# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*[1988, ஒக்ரோபர் மாதம் 21 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1988, ஒக்ரோபர் மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.80 தபாற் செலவு : ரூபா 1.15

# 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[1988, ஒக்ரோபர் 21 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 58/88
1969

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டம் என்பனவற்றைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

## 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திற்கான திருத்தங்கள்

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப் பின்னர் இப் பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் "உரித்துடையவராயிருக்கும் தேருநர் ஒருவருக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உரித்துடைய்வராயிருக்கும் தேருநர் ஒருவருக்கு அல்லது எத்தேருநர் தொடர்பில் 127 ஆ என்னும் பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று அனுமதிக்கப்பட்டுள்ளதோ அத்தேருநர் ஒருவருக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "தேருநர் ஒவ்வொருவரினதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தேருநர் ஒவ்வொருவரினதும், அத்துடன் எத்தேருநர் தொடர்பில் 127ஆ என்னும் பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று அனுமதிக்கப்பட்டுள்ளதோ அத்தேருநர் ஒவ்வொருவரினதும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அத்தகைய ஒவ்வொரு கட்சியினதும் அல்லது குழுவினதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய குழுவின் வேறுபடுத்திக் காட்டும் இலக்கத்துக்கு எதிரே இதனையுடனடுத்து" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 48அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"வாக்கெடுப்பு நிலையங்களில் குழப்பங்கள்.

48அ. (1) பின்வருகின்றவாறான அத்தகைய ஒரு தன்மையினவான சம்பவங்கள் நிகழ்வதன் காரணமாக—

(அ) வாக்கெடுப்பு தொடங்குவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பைத் தொடங்க இயலாதிருக்கின்றவிடத்து; அல்லது

(ஆ) அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பை ஆரம்பிப்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்கெடுப்புத் தொடங்கப்பட்டு, ஆனால் வாக்கெடுப்பு முடிவடைவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரம் வரை அதனை தொடர முடியாதிருக்கின்றவிடத்து ; அல்லது

(இ) வாக்கெடுப்பு நிலையத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்குச்சீட்டுப் பெட்டிகளுள் ஏதேனுமொன்றை வாக்கெண்ணும் அலுவலருக்கு ஒப்படைக்கப்பட முடியாதிருக்கின்றவிடத்து,

அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தின் தலைமை தாங்கும் அலுவலர், அதுபற்றி உடனடியாகத் தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தெரிவித்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர் அதுபற்றி ஆணையாளருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(2) தேர்தல் மாவட்டமொன்றிலுள்ள வாக்கெடுப்பு நிலையமொன்று தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின் கீழ் தகவலொன்று கிடைக்கப்பெற்றதன் மீது ஆணையாளர், அத்தகைய தகவலின் உண்மை நிலையை நிச்சயிப்பதற்கு அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளின் பின்னர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்திலான வாக்கெடுப்பு வறிதானது என வெளிப்படுத்தலாம்.

(3) தேர்தல் மாவட்டமொன்றிலுள்ள வாக்கெடுப்பு நிலையமொன்று தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணையாளர் கட்டளையொன்றை ஆக்குமிடத்து, IV ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் இப்பிரிவில் தரப்பட்டுள்ள திரிபுகளுக்கமைய, அத்தகைய தேர்தல் மாவட்டத்திற்கான தேர்தலில் பெறப்பட்ட வாக்குகளை எண்ணுதல், அத்துடன் அத்தகைய தேர்தலின் முடிவை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை ஆக்கப்பட்டுள்ளதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்திற்குக் குறித்தொதுக்கப் பட்ட வாக்கெண்ணும் நிலையத்திற்குப் பொறுப்பான வாக்கெண்ணும் அலுவலர், 52 ஆம் பிரிவில் எது எவ்வாறிருப்பினும், எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை ஆக்கப்பட்டுள்ளதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வரும் வாக்குச்சீட்டுப் பெட்டிகளைத் தவிர, அவரது நிலையத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களிலிருந்து எல்லா வாக்குச் சீட்டுப் பெட்டிகளையும் அவர் பெற்றுக்கொண்ட பின்னர் வாக்கெண்ணுதலைத் தொடங்குதல் வேண்டும்.

(5) தெரிவத்தாட்சி அலுவலரானவர், 53 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எல்லா வாக்கெண்ணும் அலுவலர்களினாலும் அவருக்குக் கொடுத்துதவப்பட்ட கூற்றுக்களிலிருந்து, அத்தகைய தேர்தல் மாவட்டத்துக்கான தேர்தலில் (எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அவ்வாக்கெடுப்பு நிலையத்தில் அளிக்கப்பட்ட வாக்குகள் நீங்கலாக) அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வோர் அரசியற்கட்சியினாலும் சுயேச்சைக் குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகளையும் அத்துடன் அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது குழுவினாலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளரினாலும் பெறப்பட்ட முந்துரிமைகளையும் கூட்டி, நிச்சயப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அதுபற்றிய கூற்று ஒன்றினை ஆணையாளருக்கு உடனடியாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(6) ஆணையாளரானவர், (5) ஆம் உட்பிரிவின் கீழான கூற்று ஒன்றினைப் பெற்றுக்கொண்டதன்மேல், எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்தில் பெறப்பட்ட வாக்குகளை அல்லது பெறப்பட்டிருக்கக்கூடிய வாக்குகளை எண்ணத்தவறியமையால் முடிவு பாதிக்கப்படமாட்டாதென அபிப்பிராயப்படுமிடத்து, அவர் 60 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், அத்தகைய கூற்றுக்கும் அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளுக்குமிணங்க வெளிப்படுத்துகையொன்றைச் செய்யும்படி தெரிவத்தாட்சி அலுவலரைப் பணித்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர் அதற்கிணங்க வெளிப்படுத்துகையொன்றைச் செய்தலும் வேண்டும்.

(7) (அ) ஆணையாளரானவர், (5) ஆம் உட்பிரிவின் கீழான கூற்று ஒன்றினைப் பெற்றுக்கொண்டதன்மேல், எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்தில் பெறப்பட்ட வாக்குகளை அல்லது பெறப்பட்டிருக்கக்கூடிய வாக்குகளை எண்ணத் தவறியமையால் அத்தகைய தேர்தல் மாவட்டத்துக்கான தேர்தலின் முடிவு பாதிக்கப்படுமென அபிப்பிராயப்படுமிடத்து, அவர், அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் புதிய வாக்கெடுப்பொன்றை நடாத்துவதற்கான தேதியை உடனடியாக நியமித்தல் வேண்டும்.

(ஆ) ஆணையாளரானவர் புதிய வாக்கெடுப்புத் தேதி பற்றி தேசிய மொழி ஒவ்வொன்றிலும் ஆகக் குறைந்தது ஒரு புதினத் தாளிலும் அத்துடன் எந்த வாக்கெடுப்பு மாவட்டத்தில் அத்தகைய வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ளதோ அந்த வாக்கெடுப்பு மாவட்டத்தில் துலாம்பரமாக வெளிக்காட்டி வைக்கப்படும் அறிவித்தல்கள் மூலமும் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(இ) பிரிவுகள் 28 முதல் 47 வரையிலானவற்றின் (இரண்டும் உட்பட) ஏற்பாடுகள், பந்தி (அ) வின் கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பு ஒன்றில், வாக்களிப்பிற்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும். அந்த வாக்கெடுப்பின் பயன்படுத்தப்படவேண்டிய தேர்ருநர்கள் இடாப்பு, முந்திய வாக்கெடுப்பில் பயன்படுத்தப்பட்ட அதே இடாப்பாதல் வேண்டும்.

(ஈ) பந்தி (அ) வின் கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பொன்றிற்கு, பிரிவுகள் 73, 74 என்பவற்றினதும் 79 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்கும் நோக்கங்களுக்காக, அப்பிரிவுகளிலுள்ள "எத்தேதியன்று அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெற்றதோ அத்தேதியைத் தொடர்ந்து வரும் நாள்" என்பது பற்றிய குறிப்பீடுகள் அத்தகைய வாக்கெடுப்பை நடாத்துவதற்கு நியமிக்கப்பட்ட தேதிக்கு அடுத்துவரும் நாளுக்கான குறிப்பீடுகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(உ) பந்தி (அ) வின் கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பொன்றில் வாக்களித்தமை காரணமாக, தேர்தல் ஒன்றில் ஒரு தடவைக்குக் கூடுதலாக வாக்களிப்பவரான ஆளொருவர் இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படலாகாது.

(8) ஏழாம் உட்பிரிவின்கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பொன்று தொடர்பில் 55 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதன் மேல், தெரிவத்தாட்சி அலுவலரானவர், அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வோர் அரசியற் கட்சியினாலும் சுயேச்சைக் குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகளையும் அத்துடன் அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது குழுவினாலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளரினாலும் பெறப்பட்ட முந்துரிமைகளையும் கூட்டி, (7) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பொன்றில் அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகள் பற்றியும் அத்துடன் அத்தகைய ஒவ்வொரு வேட்பாளரினாலும் பெறப்பட்ட முந்துரிமைபற்றியும் தரப்படும் கூற்றினை (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க 60 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான வெளிப்படுத்துகை ஒன்றையும் செய்தலும் வேண்டும்.".

(9) இப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பொன்றைக் கொடுக்குமுன்னர் அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் தேதியொன்றை நியமிக்குமுன்னர், அல்லது 24 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குமுன்னர், இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்படும் தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினதும் செயலாளரையும் ஒவ்வொரு சுயேச்சைக் குழுவினதும் குழுத் தலைவரையும், அல்லது அத்தகைய செயலாளரினால் அல்லது குழுத் தலைவரினால் அந்நோக்கத்துக்கென அதிகாரமளிக்கப்பட்ட முகவரையும், ஆணையாளர் கலந்தாலோசித்தல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவு, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:—

"(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எவ்வாறிருப்பினும், அரசியலமைப்பின் 99அ என்னும் உறுப்புரையின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆசனம் வறிதாகுமிடத்து, பாராளுமன்றச் செயலாளர் நாயகம், ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்; ஆணையாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு, ஆசனத்தை வறிதாக்கிய உறுப்பினர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவராக இருந்

தாரோ அந்தக் கட்சியின் அல்லது குழுவின் உறுப்பினர் ஒருவரைப் பெயர் குறித்து நியமிக்குமாறு அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அல்லது சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரைத் தேவைப்படுத்துதல் வேண்டும். அத்தகைய பெயர் நியமனம் கிடைக்கப் பெற்றதன்மீது ஆணையாளர், அத்தகைய ஆளைப் பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட உறுப்பினரின் பெயரை கசெற்றில் வெளியிடச் செய்வித்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவு, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:—

"(9) இப்பிரிவின் நோக்கத்திற்காக, அரசியலமைப்பின் 99அ என்னும் உறுப்புரையின்கீழ், பொதுத் தேர்தலொன்றில் போட்டியிடுவ தான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆட்கள் பற்றிய நிரலில் எந்த ஆளின் பெயர் காணப்படுகின்றதோ அந்த ஆள், அத்தகைய தேர்தலில் போட்டியிடுவதற்கு, விடயத்திற்கேற்றாற் போன்று, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 127ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 127ஆ என்னும் பிரிவு, அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(4) ஆணையாளர், இப்பிரிவின் கீழ் எப்பதிவு செய்யப்பட்ட தேருநர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றனவோ அப் பதிவு செய்யப்பட்ட தேருநர்களின் பெயர்களைக் கொண்ட நிரலொன்றை அவற்றின் பிரதிகளை ஆணையாளரின் அலுவலகத்திலும் இயைபான மாவட்ட அலுவலகங்களிலும் பார்வையிடலுக்குக் கிடைக்கத்தக்கனவாகச் செய்வதன் மூலம், வெளியிடுவித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை, அவ்வட்டவணையின் 16 ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"வாக்கெடுப்பு முகவர்கள்.

16அ. (1) அத்தாட்சிப்படுத்தும் அலுவலர், அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வோர் அரசியற் கட்சியினதும் செயலாளருக்கும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதன் முகவருக்கும் அத்துடன் ஒவ்வொரு சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவருக்கும் இச்சட்டத்தின்கீழ் அஞ்சல் வாக்காளர்களாகக் கொள்ளப்படுபவர்களும், தான் அத்தாட்சிப்படுத்தும் அலுவலராயிருக்கும் அலுவலகத்தின் கூறின் அல்லது தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் கொண்டு தான் வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்னுகின்ற தேதியையும் இடத்தையும் அறிவிக்க வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவிக்கப் பெற்றவரான ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதன் முகவர் அல்லது எவரேனும் குழுத் தலைவர், வாக்கெடுப்பின்போது எவரேனும் வாக்கெடுப்பு முகவரின் நியமனத்தை ஒழிப்பதற்கான தேவையைக் கவனத்திற் கொண்டு, வாக்கெடுப்பில் சமுகமளிப்பதற்கென இருவரை விஞ்சாத அத்தகைய எண்ணிக்கையினரான வாக்கெடுப்பு முகவர்களை நியமிக்கலாம். நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்கள், அவர்களது தேசிய அடையாள அட்டைகளின் அல்லது ஓர் அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட வேறு அடையாள அட்டைகளின் இலக்கங்கள் அத்துடன் அவர்களது முகவரிகள் என்பனவற்றை எடுத்துக்கூறுவதான அத்தகைய ஒவ்வொரு நியமனமும் பற்றிய எழுத்திலான அறிவித்தல் அத்தகைய செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் அல்லது குழுத்தலைவரால் அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு வாகெடுப்பு ஆரம்பமாவதற்குமுன் அல்லது வாக்கெடுப்பின்போது, கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய செயலாளர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத்தலைவர், அத்தகைய வாக்கெடுப்பில் சமுகமளிப்பதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் வாக்கெடுப்பு முகவரின் பெயரை அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்குத் தெரிவித்தபின்னர், அந்த வாக்கெடுப்பு முகவரின் நியமனத்தை ஒழித்து அத்தகைய வாக்கெடுப்பில் சமுகமளிப்பதற்கென மற்றொரு வாக்கெடுப்பு முகவரை நியமிக்குமிடத்து, விடயத்திற்கேற்ப, அத்தகைய செயலாளர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத்தலைவர், அத்தகைய நியமனம் ஒழிக்கப்பட்டதையும் அத்துடன் அத்தகைய வாக்கெடுப்பில் சமுகமளிக்கவுள்ள புதிய வாக்கெடுப்பு முகவரின் பெயர், அவரது தேசிய அடையாள அட்டையின் அல்லது ஓர் அரசாங்கத் திணைக்களத்தால் அல்லது ஓர் பகிரங்க கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட வேறு அடையாள அட்டையின் இலக்கம் அத்துடன் அவரது முகவரி என்பவற்றையும், அத்தகைய அலுவலருக்கு எழுத்தில் தெரிவித்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவால் அல்லது (3) ஆம் உட்பிரிவால் தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்குப் பெயர் அறிவிக்கப்படாத வாக்கெடுப்பு முகவர் எவரும், அத்தகைய அலுவலகத்தில், கூறில் அல்லது தாபனத்தில் நடாத்தப்படும் வாக்கெடுப்பு எதிலும் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் ஆகாது.".

## பாகம் II

### 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்துக்கான திருத்தங்கள்

*1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

10. (இதனகத்துப் பின்னர்) இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 15 இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவு என மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(2) ஏதேனும் அவசர நிலைமை காரணமாக அல்லது எதிர்பாராத சூழ்நிலைகள் காரணமாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட தேர்தல் தொடர்பான அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் நாளன்று, ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில் தேர்தலுக்கான வாக்கெடுப்பை நடாத்த முடியாதவிடத்து, ஆணையாளர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய வாக்கெடுப்பை நடாத்துவதற்கு பிறிதொரு தேதியை நியமிக்கலாம்; அத்துடன், அத்தகைய தேதியானது, பதவியிலிருக்கும் சனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் ஒரு மாதத்துக்குப் பிந்தாததாக இருத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மூலம் தேர்தல் மாவட்டம் ஒன்றில் வாக்கெடுப்பை நடாத்துவதற்கு புதிய தேதியொன்று நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய கட்டளை எந்தத் தேர்தல் மாவட்டம் தொடர்பில் ஆக்கப்பட்டுள்ளதோ அந்தத் தேர்தல் மாவட்டத்தின் வாக்கெடுப்பு முடிவடையும் வரை, ஏனைய தேர்தல் மாவட்டங்களில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணுதலானது தொடங்கப்படுதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில், "தேருநர் ஒருவருக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக, "தேருநர் ஒருவருக்கு அல்லது எத்தேருநர் தொடர்பில் 119ஆ என்னும் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று அனுமதிக்கப்பட்டுள்ளதோ அத்தேருநருக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

12· முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "தேருநர் ஒவ்வொருவரினதும் பெயருக்கெதிராக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேருநர் ஒவ்வொருவரினதும் பெயருக்கு எதிராகவும் அத்துடன், எந்தத் தேருநர் தொடர்பில் 119ஆ என்னும் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றுனது அனுமதிக்கப்பட்டுள்ளதோ, அந்தத் தேருநர் ஒவ்வொருவரினதும் பெயருக்கு எதிராகவும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 46அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

13· முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது, இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 46அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

*" வாக்கெடுப்பு நிலையங்களில் குழப்பங்கள்.*

46அ· (1) பின்வருகின்றவாறுன அத்தகைய ஒரு தன்மையினவான குழப்பங்கள், சம்பவங்கள் நிகழ்வதன் காரணமாக—

(அ) வாக்கெடுப்பு தொடங்குவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பைத் தொடங்க இயலாதிருக்கின்றவிடத்து ; அல்லது

(ஆ) அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பை ஆரம்பிப்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்கெடுப்பு தொடங்கப்பட்டு, ஆனுல் வாக்கெடுப்பு முடிவடைவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரம்வரை அதனைத் தொடர முடியாதிருக்கின்றவிடத்து ; அல்லது

(இ) வாக்கெடுப்பு நிலையத்துக்கென குறித்தொதுக்கப்பட்ட வாக்குச்சீட்டுப் பெட்டிகள், எவையேனும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு ஒப்படைக்கப்படமுடியாதிருக்கின்றவிடத்து,

அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தின் தலைமைதாங்கும் அலுவலர், அதுபற்றி உடனடியாகத் தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தெரிவித்தல் வேண்டும்; தெரிவத்தாட்சி அலுவலர் அதுபற்றி ஆணையாளருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(2) தேர்தல் மாவட்டமொன்றிலுள்ள வாக்கெடுப்பு நிலையமொன்று தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் தகவலொன்று கிடைக்கப்பெற்றதன்மேல், ஆணையாளர் அத்தகைய தகவலின் உண்மை நிலைபற்றி நிச்சயப்படுத்துவதற்கு அவசியமானதென அவர் கருதக்கூடியவாறுன அத்தகைய விசாரணைகளைச் செய்தபின்னர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்திலான வாக்கெடுப்பு வறிதானது என வெளிப்படுத்தலாம்.

(3) தேர்தல் மாவட்டமொன்றிலுள்ள வாக்கெடுப்பு நிலையமொன்று தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் கட்டளையொன்றை ஆக்குகின்றவிடத்து, IV ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன், இப்பிரிவில் தாப்பட்டுள்ள திரிபுகளுக்கமைய, அத்தகைய தேர்தல் மாவட்டத்திற்கான தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணுதல் அத்துடன் அத்தகைய தேர்தலின் முடிவை வெளிப்படுத்தல் என்பவற்றிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை ஆக்கப்பட்டுள்ளதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெண்ணும் நிலையத்திற்குப் பொறுப்பான வாக்கெண்ணும் அலுவலரானவர், 50 ஆம் பிரிவிலுள்ளது. எது எவ்வாறிருப்பினும், (2) ஆம் உட்பிரிவின் கீழ், எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் கட்டளை ஆக்கப்பட்டுள்ளதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்தியிலிருந்து வரும் வாக்குச் சீட்டுப் பெட்டிகள் தவிர, அவரது நிலையத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களிலிருந்து எல்லா வாக்குச் சீட்டுப் பெட்டிகளையும் பெற்றுக்கொண்டதன்பின்னர் அவர் வாக்குகளை எண்ணத் தொடங்குதல் வேண்டும்.

(5) ஆணையாளரானவர் 55 ஆம் பிரிவின்கீழ் எல்லாத் தெரிவத்தாட்சி அலுவலர்களாலும் அவருக்குக் கொடுத்துதவப்பட்ட கூற்றுக்களைப் பெற்றுக்கொண்டதன்மேல், எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்தில் பெறப்பட்ட வாக்குகளை அல்லது பெறப்பட்டிருக்கக்கூடிய வாக்குகளை எண்ணத்தவறியமை காரணமாகத் தேர்தல் முடிவு பாதிக்கப்படமாட்டாது என அபிப்பிராயப்படுமிடத்து, அவர் 56 ஆம் பிரிவின்கீழ் அல்லது 61 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்றைச் செய்ய முற்படுதல் வேண்டும்.

(6) (அ) ஆணையாளரானவர் 55 ஆம் பிரிவின்கீழ் எல்லாத் தெரிவத்தாட்சி அலுவலர்களாலும் தமக்குக் கொடுத்துதவப்பட்ட கூற்றுக்களைப் பெற்றுக்கொண்டதன்மேல் எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பாக (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்தில் பெறப்பட்ட வாக்குகளை அல்லது பெறப்பட்டிருக்கக்கூடிய வாக்குகளை எண்ணத் தவறியமை காரணமாகத் தேர்தல் முடிவு பாதிக்கப்படும் என அபிப்பிராயப்படுமிடத்து, அவர் உடனடியாக அத்

தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் புதிய வாக்கெடுப்பொன்றை நடாத்துவதற்கான தேதியொன்றை நியமித்தல் வேண்டும்; அத்துடன் அவ்வாறு நியமிக்கப்படும் தேதியானது, பதவியிலுள்ள சனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பு ஒரு மாதத்திற்குப் பிந்தியதாதலாகாது, ஆணையாளரானவர் புதிய வாக்கெடுப்புத் தேதிபற்றி தேசிய மொழி ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது ஒரு புதினத்தாளிலும் அத்துடன் எந்த வாக்கெடுப்பு மாவட்டத்தில் அத்தகைய வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ளதோ அந்த வாக்கெடுப்பு மாவட்டத்தில் துலாம்பரமாக வெளிக்காட்டி வைக்கப்பட்ட அறிவித்தல்கள் மூலமும் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(ஆ) பிரிவுகள் 25, 26, 27, 28, 29, 30, 31, 33, 34, 35, 36, 38, 39, 41, 42, 43, 44, 45 என்பவற்றின் ஏற்பாடுகள், (அ) என்னும் பந்தியின்கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பு ஒன்றிலான வாக்களிப்பிற்கும் அது தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும். அந்த வாக்கெடுப்பில் பயன்படுத்தப்படவேண்டிய தேருநர்கள் இடாப்பு, முந்திய வாக்கெடுப்பில் பயன்படுத்தப்பட்ட அதே இடாப்பாதல் வேண்டும்.

(இ) பந்தி (அ) என்பதன்கீழ், கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பொன்றிற்கு, பிரிவுகள் 73, 74 என்பனவற்றினதும் 78 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்கும் நோக்கத்துக்காக, அப்பிரிவுகளிலுள்ள "எத்தேதியன்று அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெற்றதோ அந்தத் தேதியைத் தொடர்ந்துவரும் நாள் என்பது பற்றிய குறிப்பீடுகள் அத்தகைய வாக்கெடுப்பை நடாத்துவதற்கு நியமிக்கப்பட்ட தேதியை அடுத்துவரும் நாளுக்கான குறிப்பீடாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) பந்தி (அ) என்பதன்கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பொன்றில் அவர் வாக்களித்தமை காரணமாக எந்த ஆள் தேர்தல் ஒன்றில் ஒரு தடவைக்குக் கூடுதலாக வாக்களிக்கின்றாரோ அந்த ஆளொருவர், இச் சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

(7) வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பதற்கான புதிய தேதியொன்று (6) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய வாக்கெடுப்பில் பெறப்பட்ட வாக்குகளை எண்ணிமுடித்தபின் 55 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய வாக்கெடுப்பில் வாக்காளர் ஒவ்வொருவருக்கும் சாதகமாக அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையைக் குறித்துக் காட்டுகின்றதான கூற்றொன்று ஆணையாளருக்கு அனுப்பப்படும்வரை 56 ஆம், 61 ஆம் அல்லது 63 ஆம் பிரிவின்கீழ் ஆணையாளரால் வெளிப்படுத்துகை எதுவும் செய்யப்படுதலாகாது.

(8) இப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்றைச் செய்யு முன்னர் அல்லது (6) ஆம் உட்பிரிவின்கீழ் தேதியொன்றை நியமிக்கு முன்னர் அல்லது 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குமுன்னர் இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்படும் தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற ஒவ்வொரு வேட்பாளரையும் அல்லது அத்தகைய வேட்பாளரினால் அந்நோக்கத்துக்கென அதிகாரமளிக்கப்பட்ட முகவரையும் ஆணையாளர் கலந்தாலோசித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 119 ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 119ஆ என்னும் பிரிவு, அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவை சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (4) ஆணையாளரானவர் எந்தப் பதிவுசெய்யப்பட்ட தேருநர்களின் விண்ணப்பங்கள் இப்பிரிவின்கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டனவோ அந்தப் பதிவுசெய்யப்பட்ட தேருநர்களின் பெயர்களைக்கொண்ட நிரலொன்றை, அதன் பிரதிகள் பார்வையிடுவதற்காக அவரது அலுவலகத்திலும், அத்துடன் இயைபான மாவட்ட அலுவலகங்களிலும் கிடைக்கத்தக்கனவாகச் செய்வதன் மூலம், வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையைப் புகுத்துதல்.*

15. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை அந்த அட்டவணையின் 16 ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"வாக்கெடுப்பு முகவர்கள்.

16அ. (1) அத்தாட்சிப்படுத்தும் அலுவலர், ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கும் அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கும் அத்துடன் ஒவ்வொரு சுயேச்சைக் குழுவினதும் குழுத் தலைவருக்கும் இச்சட்டத்தின்கீழ் அஞ்சல் வாக்காளர்களாகக் கொள்ளப்படுகின்றவர்களும், அவர் எந்த அலுவலகம், அல்லது தாபனம் தொடர்பில்

அத்தாட்சிப்படுத்தும் அலுவலராகவிருக்கின்றாரோ அந்த அலுவலகத்தின் கூறின் அல்லது தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் கொண்டு வாக்கெடுப்பை எத்தேதியிலும் அத்துடன் எந்த இடத்திலும் நடாத்த அவர் முன்னுகின்றாரோ அந்தத் தேதியையும் அந்த இடத்தையும் அறிவித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் கொடுக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியின் செயலாளர் அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது எவரேனும் குழுத் தலைவர், வாக்கெடுப்பின்போது எவரேனும் வாக்கெடுப்பு முகவரின் நியமனத்தை ஒழிக்க வேண்டிய அவசியத்தைக் கருத்திற் கொண்டு வாக்கெடுப்பிற்கு வருகை தருவதற்கு இரண்டிற்கு மேற்படாத எண்ணிக்கையினரான வாக்கெடுப்பு முகவர்களை நியமிக்கலாம். நியமிக்கப்படுகின்ற ஆட்களின் பெயர்களையும், தேசிய அடையாள அட்டையின் அல்லது அரசாங்கத் திணைக்களமொன்றினால், அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றினால் வழங்கப்பட்ட வேறு அடையாள அட்டையின் இலக்கங்களையும், முகவரிகளையும் குறிப்பிடும் அத்தகைய ஒவ்வொரு நியமனத்தினதும் எழுத்திலான அறிவித்தல், அத்தகைய செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் அல்லது குழுத்தலைவரால் வாக்கெடுப்பு ஆரம்பிப்பதற்கு முன்னர், அல்லது வாக்கெடுப்பின்போது, அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய செயலாளர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர், அல்லது குழுத் தலைவர், அத்தகைய வாக்கெடுப்பிற்கு வருகை தருவதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் வாக்கெடுப்பு முகவரின் பெயரை அத்தகைய அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு அறிவித்தபின்னர், அந்த வாக்கெடுப்பு முகவரின் நியமனத்தை ஒழித்து அத்தகைய வாக்கெடுப்பில் வருகை தருவதற்கென வேறு வாக்கெடுப்பு முகவரை நியமிக்கின்றவிடத்து, விடயத்திற்கேற்ப, அத்தகைய செயலாளர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத் தலைவர் அத்தகைய அலுவலருக்கு அத்தகைய நியமனத்தின் ஒழிப்பையும், அத்தகைய வாக்கெடுப்பிற்கு வருகைதருவதற்கு நியமிக்கப்பட்ட புதிய வாக்கெடுப்பு முகவரின் பெயரையும், தேசிய அடையாள அட்டையின், அல்லது அரசாங்கத் திணைக்களமொன்றினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றினால் வழங்கப்பட்ட வேறு அடையாள அட்டையின் இலக்கத்தையும், முகவரியையும் எழுத்தில் அறிவிக்கவேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவினால் அல்லது (3) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு எந்த வாக்கெடுப்பு முகவரின் பெயர் அறிவிக்கப்பட்டிருக்கவில்லையோ அந்த வாக்கெடுப்பு முகவர், அத்தகைய அலுவலகத்தில், கூறில் அல்லது தாபனத்தில் நடாத்தப்படும் வாக்கெடுப்பிற்கு வருகைதருவதற்கு அனுமதிக்கப்படுதல் ஆகாது.".

## பாகம் III

### 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்திற்கான திருத்தங்கள்

**1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தில் புதிய 46அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.**

16. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபை சட்டத்தின் 46 ஆம் பிரிவினை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 46அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"வாக்கெடுப்பு நிலையங்களில் குழப்பங்கள்.

46அ. (1) (அ) வாக்கெடுப்பு தொடங்குவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பைத் தொடங்க வியலாதிருக்கின்ற; அல்லது

(ஆ) வாக்கெடுப்பை ஆரம்பிப்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பு தொடங்கி ஆனால் வாக்கெடுப்பு முடிவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரம் வரை தொடர்ந்து நடாத்த முடியாது இருக்கின்ற ; அல்லது

(இ) வாக்கெடுப்பு நிலையத்திற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள எவையேனும் வாக்குச் சீட்டுப் பெட்டிகளை வாக்கெண்ணும் அலுவலருக்கு ஒப்படைக்க முடியாது இருக்கின்ற,

அத்தகைய தன்மையினவான சம்பவங்கள் நடைபெறுமிடத்து, அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தின் தலைமை தாங்கும் அலுவலர் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உடனடியாக அதனை அறிவித்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர் அதனை ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) நிருவாக மாவட்டமொன்றிலுள்ள வாக்கெடுப்பு நிலையம் ஒன்று தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின் கீழான தகவல் ஒன்றைப் பெற்றுக்கொண்டதன் பேரில், ஆணையாளரானவர், அத்தகைய தகவலின் உண்மை நிலையை நிச்சயப்படுத்துவதற்கு அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்த பின்னர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்திலான வாக்கெடுப்பு வறிதானதென வெளிப்படுத்தலாம்.

(3) ஆணையாளரானவர் நிருவாக மாவட்டமொன்றிலுள்ள வாக்கெடுப்பு நிலையமொன்று தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றை ஆக்குகின்றவிடத்து, IV ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், இப்பிரிவில் தரப்பட்ட திரிபுகளுக்கமைய, அத்தகைய நிருவாக மாவட்டத்திற்கான தேர்தல் வாக்கெடுப்பில் வாக்குகளை எண்ணுவதற்கும், அத்தகைய தேர்தல் முடிவின் வெளிப்படுத்துகைக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டுள்ள கட்டளை தொடர்பிலான வாக்கெடுப்பு நிலையம் எந்த வாக்கெண்ணும் நிலையத்திற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த வாக்கெண்ணும் நிலையத்திற்குப் பொறுப்பான வாக்கெண்ணும் அலுவலரானவர், 50 ஆம் பிரிவிலுள்ளது. எது எவ்வாறிருப்பினும், (2) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளை ஆக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்திலிருந்தான வாக்குச்சீட்டுப் பெட்டிகள் தவிர, அவரது நிலையத்திற்கெனக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களிலிருந்தான வாக்குச்சீட்டுப் பெட்டிகள் யாவற்றையும் அவர் பெற்றுக்கொண்டதன்பின்னர் வாக்குகளை எண்ணத் தொடங்குதல் வேண்டும்.

(5) தெரிவத்தாட்சி அலுவலர், 51 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின்கீழ் எல்லா வாக்கெண்ணும் அலுவலர்களினாலும் அவருக்குக் கொடுத்துதவப்பட்ட கூற்றுக்களில் இருந்து அத்தகைய நிருவாக மாவட்டத்திற்கான தேர்தலில் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியாலும் சுயேச்சைக் குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகளையும் அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது குழுவினாலும் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளரினதும் முந்துரிமை வாக்குகளையும் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை ஆக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் அளிக்கப்பட்ட வாக்குகள் தவிர, கூட்டி அறிந்துகொள்ளுதல் வேண்டும் என்பதுடன், உடனடியாக ஆணையாளருக்கு அப்பயன்படும் கூற்றொன்றை அனுப்புதலும் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் கீழான கூற்றொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல் ஆணையாளரானவர், அத்தகைய நிருவாக மாவட்டத்திற்கான தேர்தல் முடிவு 2 ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை தொடர்பான வாக்கெண்ணும் நிலையத்தில் அளிக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்டிருக்கக்கூடிய வாக்குகளை எண்ணத் தவறுவதால் பாதிக்கப்படவில்லை என அபிப்பிராயப்படுமிடத்து, அவர் அக்கூற்றுக்கு இணங்க 58 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையைச் செய்யுமாறு தெரிவத்தாட்சி அலுவலருக்குப் பணிப்புரை வழங்குவதுடன் தெரிவத்தாட்சி அலுவலர் அதற்கிணங்க வெளிப்படுத்துகையொன்றைச் செய்தலும் வேண்டும்.

(7) (அ) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் கூற்றொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல் ஆணையாளரானவர் அத்தகைய நிருவாக மாவட்டத்திற்கான தேர்தல் முடிவு (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை தொடர்பிலான வாக்கெண்ணும் நிலையத்தில் பெறப்பட்ட அல்லது பெறப்பட்டிருக்கக்கூடிய வாக்குகளை எண்ணத் தவறுவதால் பாதிக்கப்பட்டிருக்கும் என அபிப்பிராயப்படுமிடத்து, அவர், அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பொன்று எடுப்பதற்கான புதிய தேதியை உடனடியாக நியமித்தல் வேண்டும்.

(ஆ) ஆகக்குறைந்தது ஒவ்வொருதேசிய மொழியிலுமான புதினத்தாளொன்றில் வெளியிடுவதனாலும் எந்த வாக்கெடுப்பு மாவட்டத்தில் வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ளதோ அம்மாவட்டத்தில் அறிவித்தல்களைத் துலாம்பரமாக வெளிக்காட்டி வைத்தல் மூலமும் வாக்கெடுப்புக்கான புதிய தேதிபற்றிய அறிவித்தலை ஆணையாளர் கொடுத்தல் வேண்டும்.

(இ) பந்தி (அ) வின்கீழ் கட்டளையிடப்பட்டதான வாக்கெடுப்பிற்கும், வாக்கெடுப்புத் தொடர்பாக பிரிவுகள் 26, 27, 28, 29, 30, 32; 33, 34, 35, 36; 37, 38; 39, 41, 42, 43, 44, மற்றும் 45 ஆகியவற்றின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும். அந்த வாக்கெடுப்பில் பயன்படுத்தப்படவுள்ள தேருநர்கள் இடாப்பு முன்னைய வாக்கெடுப்பில் பயன்படுத்தப்பட்ட அதே இடாப்பாதல் வேண்டும்.

(ஈ) பந்தி (அ) வின்கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பு ஒன்றிற்கு 73 ஆம், 74 ஆம் பிரிவுகளின் அத்துடன் 80 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்கும் நோக்கங்களுக்காக "அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பு ஒன்று எடுக்கப்பட்ட தேதியை அடுத்துவரும் நாள் என்பது பற்றிய குறிப்பீடுகள் அத்தகைய வாக்கெடுப்பை நடாத்துவதற்கு நியமிக்கப்பட்ட தேதியை அடுத்துவரும் நாளுக்கான குறிப்பீடாகக் கருதப்படுதல் வேண்டும்.

(உ) பந்தி (அ) வின்கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பொன்றில் வாக்களிப்பதன் காரணமாக தேர்தலொன்றில் ஒன்றுக்குமேற்பட்ட தடவைகள் வாக்களிக்கும் ஆள் ஒருவர் இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறுக்குக் குற்றவாளி அல்லராகக் கருதப்படுதல் வேண்டும்.

(8) ஏழாம் உட்பிரிவின்கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பு ஒன்று தொடர்பில் 53 ஆம் பிரிவிற்கு குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொண்டதன் மேல் தெரிவத்தாட்சி அலுவலர், ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினாலும் சுயேச்சைக் குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகளையும் அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது குழுவினாலும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளருக்கும் அளிக்கப்பட்டு (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட கூற்றில் தாப்பட்டிருக்கும் முந்துரிமைகளையும், (7) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளை

யிடப்பட்ட வாக்கெடுப்பில் அத்தகைய ஒவ்வொரு கட்சிக்கும், குழுவுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளுடன் அத்துடன் ஒவ்வொரு வேட்பாளருக்கும் அளிக்கப்பட்ட முந்துரிமைகளுடனும் கூட்டுவதுடன் அதற்கிணங்க 58 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையைச் செய்தலும் வேண்டும்.".

(9) இப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பொன்றைக் கொடுக்குமுன்னர் அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் தேதியொன்றை நியமிக்கு முன்னர் அல்லது 22 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குமுன்னர், இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்படும் தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினதும் செயலாளரையும் ஒவ்வொரு சுயேச்சைக் குழுவினதும் குழுத் தலைவரையும் அல்லது அத்தகைய செயலாளரினால் அல்லது குழுத் தலைவரினால் அந்நோக்கத்துக்கென அதிகாரமளிக்கப்பட்ட முகவரையும் ஆணையாளர் கலந்தாலோசித்தல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்தல்.**

17. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையானது, 16 ஆம் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் பந்தியினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"வாக்கெடுப்பு முகவர்கள்.

16அ. (1) அத்தாட்சிப்படுத்தும் அலுவலர், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி ஒவ்வொன்றினதும் செயலாளருக்கும் அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கும் அத்துடன் ஒவ்வொரு சுயேச்சைக் குழுவினது குழுத் தலைவருக்கும், இச்சட்டத்தின்கீழ் அஞ்சல் வாக்காளர்களாகக் கொள்ளப்படுகின்றவர்களும் எந்த அலுவலகம், கூறு அல்லது தாபனம் தொடர்பில் அவர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலராக உள்ளாரோ அந்த அலுவலகத்தின், கூறின் அல்லது தாபனத்தின், அலுவலர்களையும் சேவையாளர்களையும் கொண்டு வாக்கெடுப்பை எத்தேதியன்று எந்த இடத்திலும் நடாத்த முன்னங்கொண்டுள்ளாரென்பதை அறிவித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளர் அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது எவரேனும் குழுத் தலைவர், வாக்கெடுப்பின்போது எவரேனும் வாக்கெடுப்பு முகவரின் நியமனம் ஒழிக்கப்படவேண்டிய தேவையைக் கருத்தில்கொண்டு வாக்கெடுப்பின்போது சமுகமளிப்பதற்காக இரண்டுக்கு மேற்படாத அத்தகைய எண்ணிக்கையினரான வாக்கெடுப்பு முகவர்களை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்

கப்பட்ட ஆட்களின் பெயர்கள் தேசிய அடையாள அட்டையின் அல்லது அரசாங்கத் திணைக்களமொன்றி னால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றினால் வழங்கப்பட்ட வேறு அடையாள அட்டையின் இலக் கங்கள், முகவரிகள் என்பனவற்றைக் கூறுகின்ற அத்த கைய நியமனம் ஒவ்வொன்றும் பற்றிய எழுத்திலான அறிவித்தலானது வாக்கெடுப்பு ஆரம்பிப்பதற்கு முன் அல்லது வாக்கெடுப்பின்போது அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு அத்தகைய செயலாளரால் அல்லது அதி காரமளிக்கப்பட்ட முகவரால் அல்லது குழுத் தலைவ ரால் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய செயலாளர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத்தலைவர் அத்தகைய வாக்கெடுப் பில் சமுகமளிப்பதற்கென நியமிக்கப்பட்ட வாக்கெ டுப்பு முகவர் எவரினதும் பெயரை அத்தகைய அத் தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு அறிவித்தபின்னர் அவ்வாக்கெடுப்பு முகவரின் நியமனத்தை ஒழிக்கின்ற விடத்தும் அத்துடன் அத்தகைய வாக்கெடுப்பில் வருகைதருவதற்கு வேறொரு வாக்கெடுப்பு முகவரை நியமிக்கின்றவிடத்து, விடயத்திற்கேற்றுற்போன்று, அத்தகைய செயலாளர், அதிகாரமளிக்கப்பட்ட முக வர் அல்லது குழுத்தலைவர் அத்தகைய நியமனம் ஒழிக்கப்பட்டதையும் அத்தகைய வாக்கெடுப்புக்கு சமுகமளிப்பதற்கென நியமிக்கப்பட்ட புதிய வாக் கெடுப்பு முகவரின் பெயர், தேசிய அடையாள அட் டையின் அல்லது அரசாங்கத் திணைக்களமொன்றினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றினால் வழங் கப்பட்ட வேறு அடையாள அட்டையின் இலக்கம் அத் துடன் முகவரி என்பனபற்றி அத்தகைய அலுவல ருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவால் அல்லது (3) ஆம் உட் பிரிவால் தேவைப்படுத்தப்பட்டவாறு எந்த வாக்கெ டுப்பு முகவரின் பெயர் அத்தாட்சிப்படுத்தும் அலுவல ருக்கு அறிவிக்கப்படவில்லையோ அந்த வாக்கெடுப்பு முகவர் எவரும் அத்தகைய அலுவலகத்தில், கூறில் அல் லது தாபனத்தில் நடைபெறும் வாக்கெடுப்பு ஒன்றிற்கு சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் ஆகாது.".